**சுருக்கம்**

பள்ளிக்கல்வி - ஆசிரியர் பொது மாறுதல் - ஊராட்சி ஒன்றியம்/நகராட்சி/மாநகராட்சி தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் மற்றும் அரசு/நகராட்சி/மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் - 2007-2008ஆம் கல்வி ஆண்டில் கடைபிடிக்கப்பட வேண்டிய நெறிமுறைகள் - ஆணை வெளியிடப்படுகின்றது.

---

**பள்ளிக் கல்வித் (இ1) துறை**

அரசாணை (நிலை) எண். **103**
நாள்: **07.05.2007**

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண். 79, பள்ளிக் கல்வித் (இ1) துறை, நாள் 6.6.2006.

2. பள்ளிக் கல்வி இயக்குநர் கடிதம் ந.க.எண். 35786/ஏ1/இ2/2007 நாள் 24.4.2007.

---

**ஆணை:-**

ஆசிரியர் சமுதாயத்தின் நலனுக்காக வெளிப்படையான, தெளிவான, ஒளிவு மறைவற்ற கலந்தாய்வு பொது மாறுதல் வழிகாட்டி விதிமுறைகள் தொடர்ந்து கடைபிடிக்கப்படும் என்ற அரசின் முடிவிற்கேற்ப பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் ஊராட்சி ஒன்றியம்/ நகராட்சி/மாநகராட்சி தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் மற்றும் அரசு/நகராட்சி/மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து வகை ஆசிரியர்களிடையே, 2007-2008ஆம் கல்வியாண்டில் பொது மாறுதல்கள் செய்வதற்கு கீழ்க்காணும் நெறிமுறைகளை பின்பற்ற வேண்டுமென்று அரசு ஆணையிடுகிறது:-

i. மூன்று வருடங்களுக்கு மேல் அரசுப் பணியாளர்கள் ஒரே பணியிடத்தில் பணியாற்றக்கூடாது என்ற பொதுவான ஆணை, ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில் அவர்கள் பணிபுரியும் பணியிடங்கள் நிர்வாகப் பணியிடங்கள் அல்ல என்பதால் கடைபிடிக்கப்பட்டு வருவதில்லை. இதே முறை தொடரலாம்.

ii. பணி ஓய்வு, பணித்துறப்பு, பணிநீக்கம், பதவி உயர்வு, மரணம், புதிய பணியிடங்கள் உருவாக்கப்படுதல் மற்றும் நிர்வாகக் காரணங்கள் போன்ற இனங்களால் ஏற்படும் காலிப் பணியிடங்களுக்கு மட்டும்

பொது மாறுதல்கள் செய்யப்படவேண்டும். ஒரு ஆசிரியருக்கு மாறுதல் தருவதற்காக எக்காரணம் கொண்டும் மற்றொரு ஆசிரியரை மாறுதல் செய்யக் கூடாது.

iii. மாநிலத்தில் ஏற்பட்டுள்ள அனைத்து காலிப் பணியிடங்களின் பட்டியல் ஆரம்ப/ நடுநிலைப் பள்ளிகளாக இருந்தால் சம்மந்தப்பட்ட உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் மற்றும் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் அலுவலகங்களிலும், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளாக இருந்தால் சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகங்களில் உள்ள அறிவிப்புப் பலகையில் அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

iv. விளம்பரப்படுத்தப்பட்ட பணியிடங்களுக்கு பொது மாறுதல்கள் குறித்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு அவற்றினை உரிய பதிவேட்டில் பதிவு செய்து, வரிசை எண் கொடுக்கப்பட்டு, அந்த விண்ணப்பங்கள் பற்றிய விவரங்கள் (ஆசிரியர் பெயர், மாறுதல் கோரியுள்ள இடம்) அறிவிப்புப் பலகையில் வெளியிடப்படவேண்டும். விண்ணப்பங்கள் பெறப்பட்டமைக்காக ஒப்புகையும் அனுப்பப்படவேண்டும். மேலும், மாறுதல் நெறி முறைகளும் தகவல் பலகையில் இடம் பெற வேண்டும்.

**v. ஆசிரியர்களின் மாறுதல் கோரும் விண்ணப்பங்கள், கீழ்க்கண்ட முன்னுரிமையின் அடிப்படையில் பரிசீலிக்கப்படவேண்டும்:-**

அ. ஒன்றிய / நகராட்சி / மாநகராட்சி தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் :

(i) ஒன்றியத்திற்குள்ளோ அல்லது நகராட்சிக்குள்ளோ அல்லது மாநகராட்சிக்குள்ளோ மாறுதல் கோருவது.

(ii) அதே மாவட்டத்தில் ஆசிரியர்கள் மாறுதல் கோருவது

1. ஒன்றியம் விட்டு ஒன்றியமோ,
2. ஒன்றியம் விட்டு நகராட்சியோ
3. ஒன்றியம் விட்டு மாநகராட்சியோ
4. நகராட்சி விட்டு நகராட்சியோ,
5. நகராட்சி விட்டு மாநகராட்சியோ,
6. நகராட்சி விட்டு ஒன்றியமோ
7. மாநகராட்சி விட்டு ஒன்றியமோ
8. மாநகராட்சி விட்டு நகராட்சியோ

(iii) வெளி மாவட்டங்களிலிருந்து பெறப்படும் ஆசிரியர்கள் மாறுதல் குறித்த கோரிக்கைகள்.

1. ஒன்றியம் விட்டு ஒன்றியமோ,

2. ஒன்றியம் விட்டு நகராட்சியோ

3. ஒன்றியம் விட்டு மாநகராட்சியோ

4. நகராட்சி விட்டு நகராட்சியோ,

5. நகராட்சி விட்டு மாநகராட்சியோ,

6. நகராட்சி விட்டு ஒன்றியமோ

7. மாநகராட்சி விட்டு ஒன்றியமோ

8. மாநகராட்சி விட்டு நகராட்சியோ

9. மாநகராட்சி விட்டு மாநகராட்சியோ

**ஆ. அரசு உயர்நிலை மற்றும் மேல் நிலைப் பள்ளிகள்:**

(i) மாவட்டத்திற்குள் மாறுதல் கோருவது

(ii) வெளி மாவட்டத்திலிருந்து மாறுதல் கோருவது.

**vi. ஒரு பணியிடத்திற்கு ஒருவருக்கு மேல் மாறுதல் கோரினால் கீழ்க்கண்ட நெறிமுறைகளைக் கையாண்டு முன்னுரிமை வழங்க வேண்டும்:-**

(அ) இராணுவத்தில் பணிபுரியும் பணியாளர்களின் கணவன்/மனைவியர்.

(ஆ) (i) முற்றிலும் கண்பார்வையற்றவர்கள் (total blindness).

(ii) மூன்று சக்கர வண்டியில் பயணம் செய்யும் அளவிற்கு உடல் ஊனமுற்றவர்கள், இரண்டு கால்களும் பாதிக்கப்பட்டு ஊன்றுகோல் துணையுடன் (Using calipers) மெதுவாக செல்லக்கூடிய நிலையில் உள்ள ஊனமுற்றவர்கள்.

(iii) இருதய அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள்.

(iv) கடுமையாக பாதிக்கப்பட்ட புற்றுநோயாளிகள்.

(இ) விதவைகள் மற்றும் 40 வயதைக் கடந்த திருமணம் செய்து கொள்ளாத முதுநிலை கன்னியர்.

(ஈ) ஒரே இடத்தில் குறைந்தபட்சம் ஓர் ஆண்டு (31.5.2007 அன்று) அதற்கு மேலும் பணியாற்றிய ஆசிரியர்கள்.

(உ) கணவன் மனைவி இருவரும் பணியில் இருப்பவர்கள் எனினும், ஏற்கெனவே ஒரு தம்பதியினர் (கணவன்/ மனைவி) 20 கி.மீ.சுற்றளவு துாரத்தில் உள்ள இடத்தில் பணிபுரியும் பட்சத்தில் அவர்களை separation எனக் கருதி கணவன் மனைவி முன்னுரிமை அளிக்கப் படமாட்டாது. ஒரு முறை கணவனோ அல்லது மனைவியோ கலந்தாலோசனை நிகழ்வு மூலமாக மாறுதல் பெற்றவர்கள் மீண்டும் குறைந்தது இரண்டு ஆண்டுகளுக்கு மாறுதலுக்கு விண்ணப்பிக்க கூடாது. கணவன் மனைவி என்ற முன்னுரிமை அடிப்படையில் மாறுதல் கோரும்போது அந்த மாறுதல் கோரும் இடமானது கணவனோ, மனைவியோ பணிபுரியும் இடத்திலிருந்து அதே மாவட்டத்திற்குள்ளோ அல்லது குறைந்தது 40 கி.மீ. சுற்றளவிற்குள்ளோ இருத்தல் வேண்டும். கணவன் மனைவி என்ற முன்னுரிமை மைய அரசு, மாநில அரசு அலுவலகங்கள், பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் அரசு பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றுபவர்களுக்கு மட்டுமே பொருந்தும். அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட உரிய அலுவலர்களால் பணிச்சான்று வழங்கப் படவேண்டும். இதில் மைய அரசு/ மாநில அரசு / பொதுத்துறை நிறுவனம் என்ற பாகுபாடு கிடையாது.

(ஊ) பிற ஆசிரியர்கள்

vii. கணவன் அல்லது மனைவி திடீரென்று விபத்திலோ அல்லது நோய் வாய்ப்பட்டு இறந்தாலோ அத்தகைய ஆசிரியர்கள் குறித்த நிகழ்வுகளில் கலந்தாய்வு குறித்த விதிமுறைகளைக் கடைப்பிடிக்காமல் சிறப்பு நிகழ்வாகக் கருதி மாறுதல் வழங்கலாம். எனினும் இது குறித்து அந்தந்த இயக்குநருக்கு ஒட்டு மொத்த அறிக்கை அனுப்பப்பட வேண்டும்.

2. கலந்தாய்வு (counselling) முறையில் ஆசிரியர்கள் பொதுமாறுதலின்போது கீழ்க்காணும் நிபந்தனைகளையும் அலுவலர்கள் கவனத்திற்கொள்ள வேண்டும் :-

(அ) இடைநிலை ஆசிரியர், சிறப்பாசிரியர், உடற்கல்வி ஆசிரியர், பட்டதாரி ஆசிரியர், தமிழாசிரியர், தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் முதுகலை ஆசிரியர்களை நிர்வாகக் காரணங்களுக்காக சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி / மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களால் முதலில் மாறுதல் செய்யப்பட வேண்டும். நிர்வாகக் காரணம் என்பது புகார் பெறப்பட்டு அந்தப் புகார் உரிய அலுவலரால் விசாரிக்கப்பட்டு புகாருக்கு முதல்நிலை ஆதாரம் உள்ள வழக்குகள் மற்றும் ஒழுங்குமுறை நடவடிக்கை எடுக்கப்பட்டு, குற்றச்சாட்டுகள் தொடுக்கப்பட்ட வழக்குகள் காரணமாக செய்யப்படவேண்டிய மாறுதல்கள் ஆகும். இவ்வாறு நிர்வாகக் காரணத்திற்காக செய்யப்படும் மாறுதல்கள் எதற்காக செய்யப்பட்டது என்பதை கோப்பில் குறிப்பிட்டு மாறுதல் அளிக்கப்பட வேண்டும். உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களைப் பொருத்தவரை சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அறிக்கையின் பேரிலோ அல்லது ஆதாரங்களின் அடிப்படையிலோ பள்ளிக் கல்வி இயக்குநர் மாறுதல் செய்ய வேண்டும்.

(ஆ) நிர்வாக காரணங்களுக்காக மாற்றப்பட்டவர்கள் இரண்டாண்டுகள் கழித்து விண்ணப்பிக்கலாம். ஆயினும் ஏற்கனவே பணியாற்றிய இடத்திற்கு மாறுதல் கோரி விண்ணப்பிக்கக் கூடாது.

(இ) ஒரு முறை கலந்தாலோசனை நிகழ்வு மூலமாக மாறுதல் பெற்றவர் குறைந்தது இரண்டு ஆண்டுகளுக்கு மாறுதலுக்கு விண்ணப்பிக்க இயலாது. பதவி உயர்வில் சொந்த மாவட்டத்திலிருந்து வேறு வருவாய் மாவட்டத்திற்கோ அல்லது வேறு கல்வி மாவட்டத்திற்கோ சென்ற ஆசிரியர்களைப் பொறுத்தவரை இந்த குறைந்தபட்ச காலநிர்ணயம் பொருந்தாது.

(ஈ) அனைத்துவகை ஆசிரியர்களின் மாறுதல்களை முதன்மைக் கல்வி அலுவலர்களே/ மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களே ஆணையிடலாம்.

(உ) மாறுதல்கள் கோரியுள்ள ஆசிரியர்களின் பெயர்களை பத்தி-1ல், vi-ல் கண்ட முன்னுரிமையின்படி பட்டியல் தயாரித்து அதன்படி ஒரு குறிப்பிட்ட நாளில் கலந்துரையாடலுக்கு (Counselling) வரவழைத்து அவர்களிடம் தகுதியுள்ள காலிப் பணியிடங்களின் பட்டியலைக் கொடுத்து அவர்கள் விரும்பிய இடத்திற்கு மாறுதல் அளிக்கப்பட வேண்டும். இவ்வாறு வழங்கும்போது மாறுதலால் ஏற்படும் காலிப் பணியிடத்தையும், அவ்வப்போது பட்டியலில் சேர்த்து அடுத்து முன்னுரிமைப்படி வரும் ஆசிரியர்களின் விருப்பத்தினைப் பெற்று மாறுதல்கள் வழங்கப்பட வேண்டும். மேற்படி முறையால் விண்ணப்பத்தில் குறிப்பிடாத பள்ளிகளில் காலிப் பணியிடம் இருந்து அதற்கு அவர்கள் விருப்பம் தெரிவித்தால் மாறுதல் வழங்கலாம். மாறுதல் ஆணைகள் எந்த அடிப்படையில் வழங்கப்பட்டது என்பது குறித்த விவரம் அறிவிப்புப் பலகையில் தெளிவாக வெளியிடப்பட வேண்டும்.

(ஊ) மலைப்பாங்கான இடங்களில் உள்ள தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு ஆசிரியர்கள் செல்ல தயக்கம் காட்டுவார்கள் என்பதாலும், இதனால் இவ்விடங்களில் அமைந்துள்ள பள்ளிகளில் ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இல்லாமல் இருக்க மலைச் சுழற்சி முறை (Hill rotation) அரசாணை (நிலை) எண்.404 கல்வி, நாள் 25.5.94ன்படி மாறுதல்கள் வழங்கப்பட்டு வருகின்றது. இதே முறை பின்பற்றப்படலாம். எனவே பத்தி-1, vi-ல் குறிப்பிட்டுள்ள மாறுதல் நெறிமுறைகள் மலைச் சுழற்சி மாறுதல் முறைக்குப் பொருந்தாது.

(எ) உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களின் மாறுதல்களைப் பொருத்தவரை பள்ளிக் கல்வி இயக்குநரால் மாநிலம் தழுவிய பட்டியல் பேணப்படுவதால், அந்த காலிப் பணியிட விவரங்களை பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்திலும் முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்திலும் அறிவிப்புப் பலகையில் வெளியிட வேண்டும். இவ்விரு வகை தலைமை ஆசிரியர்களுக்கும் மாநில அளவில் பள்ளிக் கல்வி இயக்குநரால் பொது மாறுதல் கலந்தாய்வு நடத்தப்படும்.

(ஏ) கலந்தாய்வு முறை பொது மாறுதலானது முதற்கட்டமாக ஜுன் மாதத்திலும், இரண்டாவது கட்டமாக ஜுலை மாதத்திலும் நடத்தி

முடிக்கப்படவேண்டும். அதற்குப்பின் நடக்கும் கலந்தாய்வு பொது மாறுதலானது, பதவி உயர்வினால் அல்லது ஏற்கக் கூடிய காரணங்களினால் ஏற்படும் காலிப் பணியிடங்களுக்கு மட்டுமே நடைபெற வேண்டும்.

(ஐ) (i). மனமொத்த மாறுதல்களைப் பொருத்தமட்டில், பள்ளிக் கல்வி இயக்குநர் / முதன்மைக் கல்வி அலுவலர் / மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் ஆகியோர் கலந்தாய்வு பொது மாறுதல் நடைபெறுவதற்கு முன்னர் செய்து முடிக்க வேண்டும். அதே போன்று, எளிதில் செல்ல இயலாத இடங்களில் பணிபுரியும் திருமணமாகாத பெண் ஆசிரியர்களை தேவையெனக் கருதப்படும்பட்சத்தில், சூழ்நிலைக்கேற்ப அந்தந்த இயக்குநரின் அனுமதிக்குட்பட்டு மாறுதல் செய்யலாம்.

(ii) மனமொத்த மாறுதலில் ஏற்கனவே பயனடைந்தவர், திருப்புவம் அதே இடத்திற்கு மனமொத்த மாறுதலில் செல்ல அனுமதிக்கக் கூடாது.

(க) 2002-2003ஆம் ஆண்டில் முதல் நியமனம் பெற்ற இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் சிறப்பாசிரியர்கள் அவர்கள் நியமனம் பெற்ற மாவட்டத்தில் 3 ஆண்டு காலம் பணிபுரிந்த பின்னர் வேறு மாவட்டத்திற்கு மாறுதல் அளிப்பது குறித்து பரிசீலிக்கப்பட வேண்டும்.

(ங) கலந்தாய்வு நாளன்றே மாறுதல் உத்தரவு அளிக்கப்பட வேண்டும்.

(ச) தொடக்கக் கல்வி இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் இணை இயக்குநர்கள் கலந்துரையாடல் மையங்களில் திsர் சோதனை செய்து முறையான வகையில் மாறுதல் வழங்கும் பணி நடைபெறுவதை உறுதி செய்து கொள்ள வேண்டும். வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்ட பின்பு மாறுதல் பணி குறித்த உரிய கால அட்டவணை தயாரிக்கப்பட்ட பின்பு இவ்விவரங்கள் குறித்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர் மூலமாக செய்தித் தாள்களில் அறிவிப்பு வெளியிடப்படவேண்டும்.

(ஞ) உபரி ஆசிரியர் பணியிடங்களை பணி நிரவல் செய்த பின்னரே பொது மாறுதல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு பணி நிரவல் செய்யப்படும் போது தொடக்கப்பள்ளியில் குறைந்தது இரு ஆசிரியர்கள் இருக்க வேண்டும் என்பது உறுதி செய்யப்படவேண்டும்.

(ட) இந்த மாறுதலில் அலகு விட்டு அலகு என்பது பள்ளிக் கல்வித் துறையின் கீழுள்ள அரசுப் பள்ளிகள், ஒன்றியப் பள்ளிகள், நகராட்சிப் பள்ளிகள், மாநகராட்சிப் பள்ளிகள் ஆகியவற்றினை மட்டுமே குறிக்கும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைப் பள்ளிகள், பிற்பட்டோர் நலத்துறை பள்ளிகள் போன்றவைகள் வேறு துறையின் கீழ் வருவதால் அவைகள் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் தனி அலகு எனக் கருத இயலாது.

(ண) (i) சென்னை, கோயமுத்தூர், மதுரை மாநகராட்சி பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து வகை ஆசிரியர்களில் ஒன்றியம்/ நகராட்சி / ஆரம்ப / நடுநிலைப்பள்ளிகளுக்கும் அரசு மற்றும் நகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கும் மாறுதல் கோருபவர்களுக்கும், ஒன்றிய, நகராட்சி ஆரம்ப, நடுநிலைப் பள்ளிகளிலும் மற்றும் அரசு, நகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களிலிருந்து இம்மூன்று மாநகராட்சி பள்ளிகளுக்கு மாறுதல் கோருபவர்களுக்கும் முறையே ஆரம்ப, நடுநிலைப் பள்ளிகளுக்கு தொடக்கக்கல்வி இயக்குநரும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு பள்ளிக் கல்வி இயக்குநரும் பரிசீலித்து மாறுதல் அளிக்கலாம்.

(ii) பள்ளிக் கல்வித் துறையில் உயர்நிலைப் பள்ளிகளில் 6, 7, 8 வகுப்புகளில் காலியேற்படும் பணியிடங்கள் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களாக தரம் உயர்த்தப்பட்டு, பட்டதாரி ஆசிரியர்களால் நிரப்பப்பட்டு வருகின்றன. ஆசிரியர்களுக்கான துறை மாறுதல் வழங்கும் நிகழ்வுகளில் பிற துறைகளில் 6, 7, 8 வகுப்புகளில் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்கள் மேற்படி பணியிடங்களுக்கு பொது மாறுதல் பெற இயலாது என்பதையும், எனினும் அப்பணியிடங்களுக்கு பட்டதாரி ஆசிரியர்கள் துறை மாறுதல் கோரும் பட்சத்தில் உரிய விதிமுறைகளுக்குட்பட்டு பரிசீலிக்கலாம்.

3. பள்ளிக் கல்வித் துறையைப் பொறுத்தமட்டில், ஆசிரியப் பணியிட மாறுதல்கள் கலந்தாலோசனை (counselling) முறையில், அவ்வாசிரியப் பெருமக்களின் விருப்பத்துக்கு ஏற்றபடி மாறுதல் செய்யப்படுவதால் “மாறுதல் பயணப்படி” போன்ற எந்தவித செலவினமும் அரசுக்கு ஏற்படக்கூடாது எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

4. இந்த வழிகாட்டுதல் நெறிமுறைகளின் அடிப்படையில் தெளிவான நடவடிக்கைகளை வகுத்து கள அலுவலர்களுக்கு அனுப்பும்படி பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம. குற்றாலிங்கம்

அரசு செயலாளர்.

பெறுநர்

பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6.

தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6.

நகல்

பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் அலுவலகம், சென்னை-9

முதலமைச்சரின் அலுவலகம், சென்னை-9

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.